# SRI CHANDRASEKHARENDRA SARASWATHI VISWA MAHAVIDYALAYA

Deemed to be University U/S 3 of UGC Act 1956, Accredited with "A" Grade by NAAC

Enathur, Kanchipuram – 631 561


## Press Release on International Day of Yoga-2022 at SCSVMV

எந்து காண்பித்து தடுப்பூசி செலுத்திக் கொள்ள ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

# காஞ்சிபுரம் சங்கரா பல்கலையில் யோகா தின கொண்டாட்டம்



விழாவில் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழும், பரிசும் வழங்கிய பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ்.வி.ராகவன். உடன் (இடமிருந்து) சர்வதேச கிராண்ட் மாஸ்டர் பிரக்ஞானந்தா, செஸ் பயிற்சியாளர் ஆர்.பி.ரமேஷ்.

**காஞ்சிபுரம், ஜூன் 21:** காஞ்சிபுரம் அருகே ஏனாத்தூரில் சந்திர சேகரேந்திர விஸ்வ மகா வித்யாலயா நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தில் 8-ஆவது சர்வதேச யோகா தின விழா நடைபெற்றது.

விழாவுக்கு பல்கலைக்கழகத் துணைவேந்தர் எஸ்.வி.ராகவன் தலைமை வகித்து யோகாவின் முக்கியத்துவம் குறித்து பேசினார். பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள், சான்றிதழும் வழங்கினார்.

விழாவில் பங்கேற்ற சிறப்பு விருந்தினர் சர்வதேச செஸ் கிராண்ட் மாஸ்டர் பிரக்ஞானந்தாவுக்கு இளம் சாதனையாளர் விருதும், அவரது பயிற்சியாளர் கிராண்ட் மாஸ்டர் ஆர்.பி.ரமேஷுக்கு சிறந்த பயிற்சியாளர் விருதும் பல்கலைக்கழகத்தின் சார்பில் வழங்கப்பட்டன. பல்கலைக்கழகத்தின் ஆயுர்வேத மருத்துவர் குருபிரசாத் தலைமையில் 400க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள், மாணவ,மாணவியர்கள் யோகாசனம் செய்தனர்.

தொடர்ந்து இளங்கலை ஆயுர்வேத மாணவர் பார்கவ் ஆச்சார் யோகாசனங்களை செய்து காண்பித்து அதன் சிகிச்சைப் பயன்பாடுகளையும் விளக்கி செய்து காண்பித்தார்.

இந்த விழாவில் ஜூனியர் ஜூடோ சாம்பியன்ஷிப் போட்டிகளில் முதல் பரிசு பெற்ற பல்கலைக்கழக பி.காம் முதலாம் ஆண்டு மாணவர் கேவ்ய ராஜ்திராஜாவும் கௌரவிக்கப்பட்டார். நிறைவாக பேராசிரியை உமா நன்றி கூறினார்.

### காஞ்சிபுரம் ஏனாத்தூர் பல்கலைக்கழகத்தில்

## 8-வது சர்வதேச யோகா தின கொண்டாட்டம்



▸▸ காஞ்சிபுரம் ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி விஸ்வ மகாவித்யாலயா நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 8-வது சர்வதேச யோகா தின விழாவின்போது, சர்வதேச செஸ் கிராண்ட் மாஸ்டர் ஆர்.பிரக்ஞானந்தாவுக்கு இளம் சாதனையாளர் விருது, அவரது பயிற்சியாளர் கிராண்ட் மாஸ்டர் ஆர்.பி.ரமேஷுக்கு சிறந்த பயிற்சியாளர் விருது வழங்கப்பட்டது.

■ சென்னை

காஞ்சிபுரம் ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி விஸ்வ மகாவித்யாலயா நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தில் 8-வது சர்வதேச யோகா தின விழா நடைபெற்றது.

ஆயுர்வேத துறையைச் சேர்ந்த மருத்துவர் பிந்து வரவேற்றார். துணைவேந்தர் எஸ்.வி.ராகவன் தலைமை தாங்கி பேசும்போது, உடல்நலம் பேணுதலின் அவசியம் குறித்தும், அதில் யோகாவின் பங்கு குறித்தும் விளக்கினார்.

விழாவில் சர்வதேச செஸ் கிராண்ட் மாஸ்டர் ஆர்.பிரக்ஞானந்தா, அவரது பயிற்சியாளர் கிராண்ட் மாஸ்டர் ஆர்.பி.ரமேஷ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். பிரக்ஞானந்தாவுக்கு இளம் சாதனையாளர் விருதும், பயிற்சியாளர் ரமேஷுக்கு சிறந்த பயிற்சியாளர் விருதும் பல்கலைக்கழகம் சார்பாக வழங்கப்பட்டன.

ஆயுர்வேத துறை மருத்துவர் குருபிரசாத் தலைமையில் 400-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் யோகாசனங்களைச் செய்தனர். இளங்கலை ஆயுர்வேத மாணவர் பார்கவ் ஆச்சார் யோகாசனங்களை அதன் சிகிச்சைப் பயன்பாடுகளுடன் செய்துகாண்பித்தார். 20-க்கும் குறைந்த வயதினருக்கான கேடட் மற்றும் ஜூனியர் ஸ்டேட் ஜூடோ சாம்பியன் ஷிப் போட்டிகளுக்கான முதல் பரிசை வென்ற மாணவர் கே.வி.பாரதிராஜாவும் கவுரவிக்கப்பட்டார்.




***Several events were conducted as part of the Yoga Day celebrations at the Sri Chandrasekharendra Saraswathi Viswa Mahavidyalaya (SCSVMV), Kanchipuram. Grand Master Praggnanandhaa and his trainer R B Rames were the chief guests of the event. Vice chancellor S RV Raghavan conferred them with the young achiever and best trainer award to them.***